TAMIL

Court Network



# நீதிமன்றத்தில் உங்கள் நாள்

## A Guide

Magistrates' Court

# நடுவர் நீதிமன்றத்தில் நீதிமன்ற வழக்கு வகைகள்

**குற்றவியல்:** நீங்கள் சட்டத்தை மீறிவிட்டீர்கள் என்று காவல்துறை கூறுகின்ற ஒரு வழக்கு உதாரணமாக, போக்குவரத்துக் குற்றங்கள், திருட்டு அல்லது தாக்குதல்.

**குடியியல்:** இரு தரப்பினரிடையேயான ஒரு பிணக்கு. உதாரணமாக, கடன், ஒப்பந்தத்தை மீறுதல், செலுத்தப்படாத அபராதம்.

**தலையீட்டு உத்தரவு:** ஒருவர் வன்முறையில் ஈடுபட்ட அல்லது மற்றொரு நபருக்கு தீங்கு விளைவித்த ஒரு வழக்கு உதாரணமாக, ஒரு குடும்ப உறுப்பினர், பக்கத்து வீட்டுக்காரர், அந்நியர் மற்றும் காவல்துறை அல்லது பாதிக்கப்பட்ட நபர் பாதுகாப்புக்காக ஒரு தலையீட்டு உத்தரவை நாடுகின்றனர்.



# நீதிமன்றத்திற்குத் தயாராதல்

## நீதிமன்றத்திற்குச் சென்றடைதல்

- நீதிமன்றங்கள் எப்போதும் பொதுப் போக்குவரத்துக்கு அருகில் இருப்பதில்லை. அத்துடன் வாகனம் நிறுத்துமிடம் எல்லா நேரமும் வெற்றிடமாக அல்லது இலவசமாகக் கிடைக்கக்கூடியதாக இருக்காது. உங்கள் நீதிமன்ற தேதிக்கு முன் நீங்கள் எப்படி நீதிமன்றத்திற்கு வந்துசேர்வீர்கள் மற்றும் வெளியேறுவீர்கள் என்பதைக் கருத்தில்கொள்ளுங்கள்.
- நீதிமன்றக் கட்டிடத்திற்குள் நுழைய நீங்கள் பாதுகாப்புச் சோதனையைக் கடந்து செல்ல வேண்டும். ஆயுதங்கள் அல்லது கூர்மையான பொருட்களை நீதிமன்றத்திற்குக் கொண்டு வர வேண்டாம்.

## உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால்

- நீதிமன்றத்தில் உங்களுக்கு உதவி வழங்க ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், உங்கள் நீதிமன்ற தேதிக்கு முன் நீதிமன்றத்தை அழைக்கவும். நீங்கள் ஓர் இலவச மொழிபெயர்ப்பாளர் சேவைக்குத் தகுதியுடையவராக இருக்கலாம்.
- உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், நீங்கள் ஒருவரைப் பயன்படுத்துவது முக்கியமாகும் நீதிமன்றத்தில் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்வது முக்கியம்.
- நீங்கள் மொழிபெயர்ப்பாளரை முன்பதிவு செய்திருந்தால், மொழிபெயர்ப்பாளர் இல்லாமல் உங்கள் நீதிமன்ற விசாரணை நடக்கக் கூடாது. ஒரு மொழிபெயர்ப்பாளர் முன்பதிவு செய்யப்பட்டுள்ளாரா என்பது உங்களுக்குத் தெரியாவிட்டால், பதிவாளர் உதவி மையம் மூலம் சரிபார்க்கவும்.

## நீதிமன்ற விசாரணைக்கு நாள் முழுவதும் தேவைப்படலாம்

- நீங்கள் சில மணிநேரங்கள் அல்லது நாள் முழுவதும் நீதிமன்றத்தில் இருக்க வேண்டியிருக்கலாம். எனவே உங்கள் நீதிமன்ற நாளில் வேறு எவற்றுக்கும் எந்த நேர ஒதுக்கீடும் செய்ய வேண்டாம். உங்களிடம் குழந்தைகள் அல்லது நீங்கள் பாராமரிக்கின்றவர்கள் இருந்தால், அவர்களை அன்றைய தினம் கவனித்துக் கொள்ள வேறொருவரை ஏற்பாடு செய்ய முயற்சிக்கவும் அல்லது நீதிமன்றத்திற்கு அதுபற்றித் தெரியப்படுத்தவும்.

## சட்ட ஆலோசனை


- நீங்கள் நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு முன் சட்ட ஆலோசனையைப் பெறும்படி பரிந்துரைக்கப்படுகிறது. நீங்கள் ஒரு வழக்கறிஞரிடம் இன்னமும் பேசவில்லை என்றால், நீங்கள் கடமையில் உள்ள வழக்கறிஞர் சேவைக்குத் தகுதியுடையவரா எனப் பதிவாளர் அலுவலகத்தில் கேட்கலாம்.

# ஆதரவு

- முடிந்தால், துணைக்கு ஒருவரை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லுங்கள். இது ஒரு நண்பர் அல்லது குடும்ப உறுப்பினராக இருக்கலாம். அது சாத்தியமில்லை என்றால் அல்லது நீதிமன்றம் மற்றும் அதன் செயல்முறைகளை நன்கு அறிந்த ஒருவரிடமிருந்து கூடுதல் ஆதரவை நீங்கள் பெற விரும்பினால், **1800 571 239** எனும் எண்ணை அழைத்து **Court Network** இல் ஆதரவைப் பெறப் பதிவு செய்யலாம்.

# என்ன அணியவேண்டும், எதைக் கொண்டுவர வேண்டும்

- இவற்றை அணியுங்கள்: நேர்த்தியான, சுத்தமான ஆடைகள்
- தின்பண்டங்கள் மற்றும் தண்ணீர், முழுமையாக சார்ஜ் செய்யப்பட்ட சாதனங்கள் மற்றும் உங்கள் வழக்கு/விடயம் தொடர்பான ஆவணங்கள்.
- இவற்றைச் செய்ய வேண்டாம்: தொப்பி அணிவது அல்லது உலோகம் அல்லது கண்ணாடியை நீதிமன்றத்திற்குக் கொண்டு வருவது.



# நீதிமன்றம்

## நீங்கள் வந்து சேரும்போது

- நீதிமன்றத்திற்கு வந்ததும், பதிவாளர் முகப்புக்குச் செல்லவும்.
- உங்களுக்கு நீதிமன்ற விசாரணை இருப்பதாக பதிவு ஊழியர்களிடம் சொல்லுங்கள். உங்கள் நீதிமன்ற ஆவணங்களை அவர்களிடம் காட்டுங்கள்.
- நீதிமன்றம் உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் ஒருவரைப் பதிவு செய்திருந்தால், அவர்கள் எப்போது வருவார்கள் என்று ஊழியர்களிடம் கேளுங்கள். எந்த மொழிபெயர்ப்பாளரும் முன்பதிவு செய்யப்படவில்லை, ஆனால் உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் ஒருவர் தேவைப்பட்டால், ஒரு மொழிபெயர்ப்பாளர் கிடைப்பாரா என்று ஊழியர்களிடம் கேளுங்கள்.
- உங்களுக்கு வழக்கறிஞர் இருக்கிறாரா அல்லது உங்களுக்காக நீங்களே வாதிடுகிறீர்களா என்று பதிவு ஊழியர்கள் கேட்பார்கள். உங்களுக்கு வழக்கறிஞர் ஒருவர் இல்லையென்றால், நீதிமன்றத்தில் கடமையில் உள்ள வழக்கறிஞர் ஒருவர் இருக்கிறாரா என்று பார்க்க வேண்டும்.
- உங்கள் வழக்கு எந்த நீதிமன்ற அறையில் விசாரிக்கப்படும் என்பதைப் பதிவகத்தால் தெரிவிக்கமுடியும்.
- உங்களுக்கு பாதுகாப்புக் கவலைகள் இருந்தால், பதிவகம் அல்லது பாதுகாப்பு அலுவலர்களிடம் தெரிவிக்கவும்.

## உங்கள் வழக்குக்காக காத்திருத்தல்

- உங்கள் வழக்கு விசாரணைக்காக நீங்கள் காத்திருக்கும்போது நீங்கள் காத்திருக்கக் காத்திருப்புப் பகுதி ஒன்று உள்ளது. நீங்கள் சில மணிநேரம் காத்திருக்க வேண்டியிருக்கலாம் என்பதால் தயவுசெய்து பொறுமையாக இருங்கள்.
- ஏதேனும் காரணத்திற்காக நீங்கள் நீதிமன்றத்தை விட்டு வெளியேற வேண்டியிருந்தால், உங்கள் வழக்கைத் தவறவிடாமல் பார்த்துக்கொள்ள பதிவகத்திடம் கூறவும்.
- மொழிபெயர்ப்பாளர் பதிவு செய்யப்பட்டிருந்தால், உங்கள் மொழிபெயர்ப்பாளர் வரும்வரை உங்கள் வழக்கு நடக்கக்கூடாது.
- உங்கள் வழக்கு தயாரானதும், நீங்கள் நீதிமன்ற அறைக்குள் வருமாறு அழைக்கப்படுவீர்கள்.




# நீதிமன்ற அறை

- உங்கள் வழக்கு தயாரானதும், நீங்கள் நீதிமன்ற அறைக்குள் வருமாறு அழைக்கப்படுவீர்கள்.
- உங்கள் அலைபேசி அழைப்பொலியை அணைத்து வையுங்கள்.
- உள்ளே நுழையும்போதும் வெளியேறும்போதும் நீதிபதியை நோக்கிச் சிரம் தாழ்த்துங்கள்.
- உங்கள் வழக்கில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி நீதிபதி உங்களிடம் சில கேள்விகளைக் கேட்கலாம். உங்களுக்கு வழக்கறிஞர் இருந்தால் அவர்கள் உங்களுக்காகப் பேச இடமளியுங்கள். ஆனால் உங்களுக்கு வழக்கறிஞர் இல்லையென்றால் நீங்கள் நீதிபதியுடன் பேசலாம். நீதிபதியை "கனம் நீதிபதி அவர்களே" என்று அழையுங்கள்.
- அவர்கள் வழக்குத் தகவலைக் கேட்ட பிறகு, என்ன செய்வது என்று நீதிபதி அவர்கள் முடிவு செய்வார்கள். நீங்கள் மீண்டும் நீதிமன்றத்திற்கு வர வேண்டியிருக்கலாம் அல்லது உங்கள் வழக்கு அதே நாளிலேயே முடிக்கப்படலாம்.
- என்ன நடக்கிறது என்பது உங்களுக்குத் தெரியாவிட்டால், நீதிபதி அவர்களிடம் கேள்விகளைக் கேட்பதில் தவறில்லை.

# நீதிமன்றத்திற்குப் பிறகு

- நீதிபதி உங்கள் வழக்கை முடித்த பிறகு, ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும்படி அல்லது கையெழுத்திடும்படி நீங்கள் கேட்கப்படலாம்.
- நீதிமன்றத்தை விட்டு வெளியேறுவதற்கு முன் பதிவக மேசைக்குச் சென்று, நீங்கள் ஏதாவது செய்ய வேண்டுமா என்று பார்க்கவும்.
- நீதிமன்ற வழக்குக்குப் பிறகு உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால் அல்லது நீங்கள் நீதிமன்றத்திற்குத் திரும்பினால் மற்றும் ஆதரவைப் பெற விரும்பினால், நீங்கள் **Court Network** ஐ **1800 571 239** எனும் எண்ணில் அழைக்கலாம்.


நீதிபதி
நீதிமன்ற எழுதுவினைஞர்
பிரதிவாதி/ வழக்கறிஞர்
சாட்சிப் பெட்டி
அரசுத்தரப்பு வழக்குத் தொடுநர்/ காவல்துறை
பொதுமக்கள் அமர்விடம்

Victorian Legal Services
**BOARD + COMMISSIONER**

Funded through the Legal Services Board Grants Program

Court Network
1800 571 239
www.courtnetwork.com.au
admin@courtnetwork.com.au
Lvl 5, 555 Lonsdale Street,
Melbourne, Vic, 3000

இது நீதிமன்றத்தில் உங்கள் நாளுக்கான பொதுவான வழிகாட்டி. நீதிமன்ற நடைமுறைகள் மாறும்போது தகவல்களும் மாறுதலுக்கு உட்பட்டது.

பிற மொழிகளில் உட்பட இணையவழி வளங்களுக்கான அணுகலுக்கு

Court Network இற்குப் பரிந்துரை செய்ய